மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் ஏற்கனவே பதில் சொல்லி விட்டேன். இப்படிப்பட்ட பிரச்சினைகளைப் பரிசீலனை செய்ய கூடுதல் விவரங்களை மாவட்ட ஆட்சித் தலைவரிட மிருந்து சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரால் கேட்கப்பட்டுள்ளது. முடிவான அறிக்கை அரசுக்கு கிடைக்கப் பெற்றதும் சானார்பட்டி ஒன்றியப் பகுதிகளை திண்டுக்கல் வட்டத்திலிருந்து பிரித்து நத்தம் வட்டத்துடன் இணைப்பதா அல்லவா என்பது பற்றி அரசால் பரிசீலிக்கப்படும்.

புறநகர் பேருந்துகள் நிலையம் அமைத்தல்

*5610 திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னைப் பெருநகர் குழுமம் பெருநகர் வளர்ச்சிக்காக கத்திப்பாரா சந்திப்பிலிருந்து மீனம்பாக்கம் வரை புறநகர் பேருந்துகள் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் கவனத்தில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

9.30. மணி

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரத்திலிருந்து சென்னை வரையில் வருகின்ற பேருந்துகளும் மற்றும் எல்லா வண்டிகளும் அந்தச் சாலையில் வருவதாலும் ஏற்படுகின்ற நெருக்கடியை தவிர்ப்பதற்காகவும் இடையிலே தாம்பரத்திலிருந்து சென்னைக்கு வரவேண்டிய பயணிகள் வசதிக்காகவும் பெருகி வருகின்ற சென்னைப் பெருநகர் குழுமம் வளர்ச்சிக்காக கத்திப்பாரா சந்திப்பிலிருந்து மீனம்பாக்கத்திற்கு இடையிலே பல கோடி ரூபாய் மதிப்புள்ள அரசுக்குச் சொந்தமான நிலங்கள் இன்றைக்கு பினாமிகளால் களவாடப்படுவதை தடுப்பதற்காக வாவது இந்தத் திட்டத்தை அங்கே கொண்டுவருவதற்கு உத்தேசிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல் பக்கத்திலே ஆலந்தூர் அருகில் ஏற்கனவே ஒரு பேருந்து நிலையம் அமைப்பதற்கான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆனால் அந்த இடம் பேருந்து நிலையம் அமைப்பதற்கு உகந்ததாக இல்லை என்ற காரணத்தால் அந்த எண்ணம் கைவிடப்பட்டது. அதற்குப் பிறகு பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான சைதாப்பேட்டையில் உள்ள

பேருந்து நிலையத்தை மாற்றி செயின்ட் தாமஸ் மவுண்ட் கிராமத்திலுள்ள நகர பேருந்து நிலையமாகப் பயன்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையோடு வழங்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு நகரத்திற்குள்ளே இருக்கின்ற நெருக்கடியைக் குறைப்பதற்கு சென்னைப் பெருநகர் குழுமம் பெருநகர் வளர்ச்சிக்காக ஜி. எஸ். டி. சாலை வழியில் பேருந்து நிலையம் மற்றும் வாகனங்கள் நிறுத்தம் அமைப்பதற்கு வேறு ஒரு பொருத்தமான இடத்தைத் தேர்ந்தெடுக்கும் பணியில் ஈடுபட்டு இருக்கிறார்கள். பொருத்தமான இடம் கிடைத்த உடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பணிமனை மாண்புமிகு அமைச்சர் அவர்களால் துவங்கப்பட்டு இருக்கிற அந்த இடத்திற்குப் பக்கத்திலே பல கோடி ரூபாய் மதிப்புள்ள நிலங்கள் உகந்ததாக இருக்கிறது என்பதை ஆதாரமாகத் தந்தால் இந்த அரசு அந்த இடத்தில் அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யுமா என தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பணிமனைக்கு அடிக்கல் நாட்டு விழாவிற்கு சென்ற நேரத்தில்தான் பக்கத்திலே கிட்டத்தட்ட 50 ஏக்கர் புறம்போக்கு நிலம் தனியாரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கிறது என்ற தகவல் கிடைத்திருக்கிறது. சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடத்தில் சொல்லப்பட்டு அவைகள் எல்லாம் சர்வே செய்யப்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அந்த சர்வே முடிந்த உடன் அந்த நிலங்களை மீட்பதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக டெப்போ அமைத்தல்

*8388 திரு. குமரி அனந்தன் :
மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளத்தில் கட்டபொம்மன் போக்குவரத்துக்கழக டெப்போ (Depot) அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.